OS 139/2021
வா.சா. 1 செல்வராஜ் த/பெ பார்த்தசாரதி
நாள் 18.02.2025

<u>குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>

17. பி.வா.சா.ஆ4 முதல் 8 மற்றும் பி.வா.சா.ஆ19 முதல் 20 ஆகிய ஆவணங்களின் சாட்சி கையெழுத்து செய்துள்ள சங்கர் என்பவர் தான் வா.சா.ஆ1 கடனுறுதி சீட்டிலும் முதலாவதாக சாட்சி கையெழுத்து செய்துள்ளார் என்றால் சரிதான்.

18. பி.வா.சா.ஆ19 மற்றும் பி.வா.சா.ஆ20 ஆவணங்களின் சாட்சி கையெழுத்து செய்துள்ள தனசேகர் என்பவர் தான். வா.சா.ஆ1 கடனுறுதி சீட்டில் இரண்டாவது சாட்சி கையெழுத்து செய்துள்ளார் என்றால் சரிதான்.

19. பி.வா.சா.ஆ9 முதல் பி.வா.சா.ஆ13 வரையான ஆவணங்களை எழுதிய பத்ராச்சலம் என்பவர் தான். வா.சா.ஆ1 கடனுறுதி சீட்டினையும் எழுதினார் என்றால் சரிதான். வா.சா.ஆ1ல் உள்ள கையெழுத்து பெருமாளின் கையெழுத்து அல்ல என்று சொன்னால் சரியல்ல. உண்மையிலேயே பெருமாள் என்னிடம் கடன் வாங்கி இருந்தால் பி.வா.சா.ஆ2 முன்னிலைக்கான ரூ.1,11,150/-ஐ கடன் கணக்கில் வரவு வைத்திருப்பேன் என்றால் சரியல்ல.

20. என்னிடம் இருந்த ஏற்கனவே பெருமாள் கையெழுத்து செய்த கடனுறுதி சீட்டுகளை பயன்படுத்தி வா.சா.ஆ1 கடனுறுதி சீட்டை எனக்கு தெரிந்தவரை வைத்து தயார் செய்து இருப்பு சாட்சிகள் மூலம் கையெழுத்து செய்து இந்த பொய்யான வழக்கினை பிரதிவாதி மீது தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

21. பங்குதாரர் என்ற முறையில் நான் பிரதிவாதிக்கு கொடுக்கவேண்டிய பாக்கி தொகை ரூ.9,50,000/- உள்ளது என்றால் சரியல்ல. பங்கு தாரர் ஆகிய என் தொகையினை வட்டியுடன் சேர்த்து நான் எடுத்துக்கொண்டேன் என்றும் ஆனால் மற்றொரு பங்குதாரரான பிரதிவாதிக்கு அவரது பங்கு தொகையை நான் கொடுக்காமல் விட்டுவிட்டேன் என்றால் சரியல்ல.

22. நான் பிரதிவாதிக்கு ஒவ்வொரு முறையும் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பும் போது பிரதிவாதி என்னை நேரில் சந்தித்தார் என்றும் அப்போது பிரதிவாதியை பங்குதாரராக மீண்டும் சேர சொல்லி வலியுறுத்தினேன் என்றும் அவ்வாறு பிரதிவாதி பங்குதாரராக சேர்ந்து அவரது லாப தொகையினை கேட்காமல் இருந்தால் பிரதிவாதி மீது நான் சட்டப்படியான நடவடிக்கை எதுவும் எடுக்கமாட்டேன் என்று உறுதி அளித்தேன் என்றும் அதனடிப்படையில் தான் பிரதிவாதி நான் அனுப்பிய எந்த வழக்கறிஞர் அறிவிப்பிற்கும் பதில் அறிவிப்பு அனுப்பவில்லை என்று சொன்னால் சரியல்ல. தாவா செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.